1995 ஏப்ரல் 5]

நான் நடவடிக்கை மேற்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நியாயம் எங்கே இருக்கிறதோ அதைப் பாராட்டுகிற நல்ல மனதுடைய இந்த உறுப்பினருடைய கோரிக்கை, இரண்டே நாட்களுக்குள் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 224, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

224—

ஒடுகத்தூரில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டுதல்

**23589—திரு. கி. தருமலிங்கம்:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒடுகத்தூரில் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒடுகத்தூரில் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-10

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற பழமொழிக்கேற்ப இந்தக் கேள்வியைத் தொடுத்து துறைக்குப் போனதோ இல்லையோ தெரியவில்லை. உடனடியாக மருத்துவமனையைக் கட்டி, அந்தக் கட்டிடத்தைத் திறக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாகவும் அப்பகுதியினுடைய கால்நடைகளின் சார்பாகவும், நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு) கால்நடைகள் சார்பாகத்தான் நான் நன்றி சொல்கிறேன். ஏன் என்றால், அந்த மருத்துவமனை பெரிய மருத்துவமனை, மலையடிவாரத்திலே இருக்கும் மருத்துவமனை. அவைகள் சட்டமன்றத்திலே வந்து கேட்காது. நான் கேட்டேன் அவைகள் சார்பாக....

[1995 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மக்களுக்குத்தான் பிரதிநிதி என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். (சிரிப்பு)

திரு. கி. தருமலிங்கம்: கால்நடைகளை வளர்ப்போர்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். உழவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று என்னுடைய தொகுதியில் மலைப்பகுதியாக உள்ள பொய்கை கிராமத்திலும் மற்றும் பள்ளிக்கொண்டா பேரூராட்சியிலும் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கொடுக்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஊராட்சி ஒன்றியக் கழகத்தின் சார்பில் தீர்மானத்தைப் போட்டு, சட்டதிட்ட விதிகளின்படி தேவையான நிலத்தையும், தேவையான தொகையையும் கட்டுவதற்கு முன்வருவார்களானால், அது குறித்து அலசி ஆராய்ந்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 40 விழுக்காடுகள் நாங்கள் பங்குத் தொகை கட்டுகிறோம்; இடமும் ஒதுக்கித் தந்து, அது இயக்குநர் அவர்களிடத்திலே கோப்பு தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு தனி கவனம் செலுத்தி, கால்நடைகள் வளர்ப்போர்கள் அதிகமாக இருப்பதாலும், சென்னைக்கு--உங்களுக்கு--தினந்தோறும் அதிகமாக பால் கொடுத்து வருவதாலும், என்னுடைய தொகுதியில் கால்நடை மருத்துவமனைக்கு விரைவாக ஆணையிட்டு மருத்துவமனைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளத்தின் தலைவியான மனித நேயம்மிக்க தலைவி, புரட்சித்தலைவி அரியாசனத்தில் அமர்ந்த பிறகுதான், ஆண்டுக்காண்டு, புரட்சித் தலைவி அவர்கள் சாதனை புரிந்து கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய ஒரு தொகுதி மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கிற 234 தொகுதிகளையும் கருணை உள்ளத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிற கருணைக் கடல்தான், நம்முடைய ஒப்பற்ற தலைவி, தாய் உள்ளத்தின் தலைவி, புரட்சித் தலைவி என்பதை நான் உங்களுக்கு கோடிட்டுக்காட்டி உங்களுடைய

1995 ஏப்ரல் 5]

பிரச்சினையைக் குறிப்பிட்டு கூறுவீர்களேயானால், அதுகுறித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாதாரணமாக கால்நடைத் துறை அமைச்சரிடத்திலே ஒரு வாக்குறுதியையும் நீங்கள் வாங்கிவிட முடியாது.

வினா எண். 225, திரு பி.ஆர்.எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை; திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை; திரு. செ.து. வரதராசன், இருக்கையில் இல்லை. திரு. சி. இராமசுவாமி கேட்கிறார்களா? கேள்வி கேட்ட 3 உறுப்பினர்களும் இல்லை. திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

225—

கடல்நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நிலையம் அமைத்தல்

14704*—திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்,**

திரு. எ. தெய்வநாயகம்

மற்றும் திரு. செ.து. வரதராஜன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெப்பமான கடல் நீரிலிருந்து 100 மெகாவாட் திறனுள்ள மின்சாரம் தயாரிக்கும் நிலையம் ஒன்றை அமெரிக்க நாட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்காக மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டதா?

(இ) எப்பொழுது எந்த இடத்தில் நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அமெரிக்க நிறுவனமான சீசோலார் பவர் என்னும் நிறுவனத்துடன் இந்த கடல்நீர் வெப்ப சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின்நிலையம் அமைக்க மைய அரசு கருத்துரு அனுப்பியதை தொடர்ந்து தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் செயல்பட்டு அதற்காக ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது.